www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| இந்துசமயம் Hinduism | Three Hours / Gr -12 (2024) | 42 | T | I,II |

(மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்)

## பகுதி I

- **1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது பொருந்தாததைத் தெரிவு செய்க.**

01) 1. சுருதி 2. அபௌருஷேயம் 3. ஆம்நாயம் 4. சுயம்பு 5. பஞ்சராத்திரம் (……….)

02) 1. சிவ புராணம் 2. விஷ்ணு புராணம் 3. பிரம புராணம் 4. சூரிய புராணம் 5. பெரிய புராணம் (……….)

03) 1. காரணம் 2. மகுடம் 3. தீபிதம் 4. காமிகம் 5. சுக்கிர நீதி (……….)

04) 1. மகேந்திரவர்மன் 2. நிம்பக்கர் 3. மாமல்லன் 4. நந்தி வர்மன் 5. பரமேஸ்வர வர்மன் (……….)

05) 1. பகவத் கீதை 2. பாரத அம்மானை 3. வைகுந்த அம்மானை 4. கம்சன் அம்மானை 5. இராமகதை (……….)

- **06 தொடக்கம் 09 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடி சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை பொருந்தாத அச்சோடிச்சொல்லைத் தெரிவு செய்க.**

06) 1. சம்பந்தர் - திருப்பல்லாண்டு
2. அப்பர் - திருத்தாண்டகம்
3. காரைக்காலம்மையார் - அற்புத திருவந்தாதி
4. மாணிக்கவாசகர் - திருவாசகம்
5. சுந்தரர் - திருத்தொண்டர் தொகை (……….)

07) 1. கர்ஷணம் - ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்தல்.
2. பிரதிஷ்டை - திருவுருவங்களை பிரதிஷ்டை செய்தல்.
3. உற்சவம் - ஆலயத்தில் வருடம் ஒருமுறை இடம்பெறும் திருவிழா
4. பிராயச்சித்தம் - குற்றநிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை
5. அந்தரிதம் - ஆலயத்தை புதிதாக அமைத்து படிமங்கள் ஸ்தாபனம் செய்தல் (……….)

08) 1. காரைக்காலம்மையார் - சங்கமருவிய காலம்
2. முருக வழிபாடு - சங்க காலம்
3. நந்திக் கொடி - பல்லவர் காலம்
4. காஞ்சி கடிகை ஸ்தானம் - சோழர் காலம்
5. திருவாவடுதுறை ஆதினம் - நாயக்கர் காலம் (……….)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

- **09ம் 10ம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் 'அ' 'ஆ' என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலுக்கு ஏற்ற விதத்தில் 'ஆ' நிரலில் உள்ள விடயங்கள் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

09)

| அ | ஆ |
|---|---|
| 1. ஆண் தெய்வ வழிபாடு | A – தரைப்பெண் வழிபாடு |
| 2. பெண் தெய்வ வழிபாடு | B - கருட இலச்சனை |
| 3. பலியிடல் வழிபாடு | C - வாளேந்திய ஆடவன் |
| 4. பறவை வழிபாடு | D - கொம்புடைய காளை |
| 5. நந்தி வழிபாடு | E - நடராஜர் வழிபாடு |

1. CBDAE 2. EACBD 3. BACED 4. ECBAD 5. CBAED

10)

| அ | ஆ |
|---|---|
| 1. பூர்வ ஆர்சிகம் | A – சதருத்திரியம் |
| 2. ஆர்ணய காண்டம் | B - சாம வேதம் |
| 3. சாந்தி பருவம் | C - இராமாயணம் |
| 4. சுக்கில யசுர் | D - மகாபாரதம் |
| 5. பௌஷ்டி காணி | E - அதர்வ வேதம் |

1. BDACE 2. CBEDA 3. EDABC 4. BCAED 5. BCDAE

- **11 – 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

11) விஷ்ணு புராணங்களில் அடங்காதது.
1. கருட புராணம் 2. பிரம்ம புராணம் 3. விஷ்ணு புராணம்
4. நாசதீய புராணம் 5. பாகவத புராணம்

12) இதிகாசங்கள் இறுதி வடிவம் பெற்ற காலம்
1. பல்லவர் காலம் 2. மௌரியர் காலம் 3. நாயக்கர் காலம்
4. குப்தர் காலம் 5. பாண்டியர் காலம்

13) சிந்து வெளியில் அகழ்வாராட்சி மேற்கொள்ளப்பட்ட காலம்
1. கி.பி 1932 – 1940 2. கி.பி 1962 – 1970 3. கி.பி 1922 - 1930
4. கி.பி 1987 – 1990 5. கி.பி 1920 – 1950

14) "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" எனக் குறிப்பிடுவது
1. சிவஞான போதம் 2. திருவருட்பயன் 3. திருமந்திரம்
4. உண்மை விளக்கம் 5. சிவப்பிரகாசம்

15) மேல்வருவோருள் காலத்தால் முற்பட்ட ஆழ்வாராகக் கருதப்படுபவர்.
1. பூதத்தாழ்வார் 2. பொய்கையாழ்வார் 3. பேயாழ்வார்
4. நம்மாழ்வார் 5. பெரியாழ்வார்

- **மேல்வரும் பகுதியில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 16 – 20 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான சேர்மானத்தை தெரிவு செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>பரந்த நோக்குடையவை | B<br>சர்க்கம் | C<br>731 சூக்தம் | D<br>சங்கிதை | E<br>திரிபுரரகசியம் |
| F<br>வம்ச வரலாறு | G<br>20 காண்டம் | H<br>பிராமணம் | I<br>காமக்கலாவிலாசம் | J<br>சனாதன தர்மம் |



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

16) புராணங்களோடு தொடர்புடைய தொகுதி.
1. BF 2. AF 3. BG 4. EH 5. DI

17) இந்து சமய சிறப்பம்சத்தோடு தொடர்புடைய தொகுதி
1. AB 2. BG 3. CI 4. EG 5. BI

18) கர்மகாண்டத்துடன் தொடர்புடைய தொகுதி
1. DA 2. DH 3. AF 4. HG 5. CI

19) அதர்வ வேதத்துடன் தொடர்புடைய தொகுதி
1. BG 2. AC 3. CG 4. CH 5. EJ

20) சாக்த ஆகமத்துடன் தொடர்புடைய தொகுதி
1. AE 2. AH 3. DE 4. BI 5. EI

- **21 தொடக்கம் 22 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.**

21) பக்தி இயக்கம்
1. பிரம்மதேயம், அக்கிரகாரங்களின் எழுச்சி
2. வேதாகம மரபுகள் பரவின.
3. திருக்கோயில்களின் எழுச்சி
4. சைவ மரபு மறுமலர்ச்சி அடைந்தது.
5. தலபுராணங்கள் அதிகம் தோற்றம் பெற்றன.

22) இராமாயணம்
1. 24000 சுலோகங்களைக் கொண்டது.
2. இந்து சமுதாய விழுமியங்களைப் பிரதிபலிக்கின்றது.
3. தமிழ் மொழியில் துளசிதாச ரால் பாடப்பட்டது.
4. 18 பருவங்களைக் கொண்டது.
5. 7 காண்டங்களை கொண்டது.

- **23 - 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்பிற்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

23) மகாபாரதம்
1. இதிகாசங்களில் ஒன்றாகும்.
2. வடமொழியில் வியாசரால் எழுதப்பட்டது.
3. இது ஓர் வைணவம் சார் இலக்கியமாகும்.
4. இது சமயம், கலை, வாழ்வியல், இலக்கியம் போன்ற கருத்துக்களை கொண்டது.
5. தமிழ், மலையாளம், யாவா மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது.

24) இராஜராஜசோழனும், சைவ நெறியும்
1. ஆலயம் அமைத்தல்
2. பிராமணர்களுக்கு மானியம் வழங்கியமை
3. நாயன்மார்களின் குரு பூசைத் தினங்கள் இடம்பெற்றன.
4. அம்மன், விநாயகர் வழிபாடு மேன்மை அடைந்தது.
5. திருமுறைகள் தொகுக்கப்பட்டது.

25) திருநாவுக்கரசர்
1. சைவ நாயன்மார்களுள் நீண்ட காலம் வாழ்ந்தவர்.
2. சிவபெருமானிடம் படிக்காசு பெற்றவர்.
3. திருத்தாண்டகம் பாடிய சிறப்புக்குரியவரர்.
4. சமண சமயத்தில் இந்து சைவ சமயத்திற்குச் சேர்ந்தவர்.
5. சிறுவயதிலே தாய் தந்தையை இழந்தவர்.

(25 x 4 = 100 புள்ளிகள்)



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி II

❖ **பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி அ

01) "இந்து நாகரீகம் தொன்மையையும் பல சிறப்பம்சங்களையும் கொண்டுள்ளது." எனும் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
அ) இந்து சமயத்தின் சிறப்பம்சங்கள் 10ஐ குறிப்பிடுக.
ஆ) நீர் அறிந்த தொல்பொருட்சான்றுகள் 05ஐ குறிப்பிடுக. (10 + 10 = 20 புள்ளிகள்)

02) "சிந்துவெளிக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
அ) சிந்துவெளி காலத்தையும் அதன் நகரங்களையும் குறிப்பிடுக.
ஆ) சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் 05ஐ குறிப்பிடுக.
இ) சிந்து வெளியில் சிவ வழிபாடு
ஈ) சிந்து வெளியில் சக்தி வழிபாடு (5 + 5 + 5 + 5 = 20 புள்ளிகள்)

03) வேதங்களை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
அ) வேதம் என்பதன் பொருளையும் அதன் பகுதிகளையும் தருக.
ஆ) வேதங்களின் சிறப்புக்கள் 5 குறிப்பிடுக.
இ) வேதகால சமயநிலை பற்றி விளக்குக.
ஈ) வேதகால தத்துவத்தை விளக்குக. (5 + 5 + 5 + 5 = 20 புள்ளிகள்)

### பகுதி – ஆ

04) ஆகமங்கள் இந்து பண்பாட்டில் பெறும் முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.
அ) ஆகமம் என்பதன் பொருள் விளக்கமும் மறுபெயர்களும்
ஆ) வழிபாட்டு முறைகள்
இ) தத்துவ சிந்தனை
ஈ) சிறப்புக்கள் (5 + 5 + 5 + 5 = 20 புள்ளிகள்)

05) இதிகாசங்களில் மகாபாரதம் பெறும் முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
அ) இலக்கிய மரபு
ஆ) சமூக நிலை
இ) சமய நெறி
ஈ) தரம்சிந்தனை (5 + 5 + 5 + 5 = 20 புள்ளிகள்)

06) புராணங்களை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
அ) புராணங்களினை வகைப்படுத்துக.
ஆ) புராணங்களின் வழிபாட்டு முறைகள்
இ) பஞ்ச இலட்சணங்கள்
ஈ) தத்துவ சிந்தனை (5 + 5 + 5 + 5 = 20 புள்ளிகள்)

07) பல்லவர் கால சமய நிலையினை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.
அ) மன்னர்களின் பங்கும் பணியும்
ஆ) நாயன்மார்களின் பங்களிப்பு
இ) அரசியல் சூழ்நிலை
ஈ) வேதாகம மரபுகள் (5 + 5 + 5 + 5 = 20 புள்ளிகள்)

08) நாயக்கர் காலத்தில் சைவ சமய வளர்ச்சிக்கு மடங்கள் ஆதினங்கள் ஆற்றிய பணிகள்
(20 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk